**தேனி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**
( 16 -11-2016 – 20-11-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 15-11-2016

**கடந்த கால வானிலை 11-11-2016 முதல் 14-11-2016 வரை**

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0.7 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 32-34 |
| குறைந்த படச வெப்பநிலை (செ) | 23-25 |
| மேக மூட்டம் | 5-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 52-75 |
| காற்றின் வேகம்(கி.மீ/மணி) | 6-10 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை 20-11-2016 - 8.30 மணி நேரம் வரை**

| காரணிகள் | 16.11.16 | 17.11.16 | 18.11.16 | 19.11.16 | 20.11.16 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 1 | 2 | 1 | 0.5 | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 26 | 26 | 26 | 26 | 26 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 19 | 19 | 19 | 19 | 19 |
| மேக மூட்டம் | 6 | 6 | 6 | 6 | 6 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 88 | 88 | 88 | 88 | 88 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 56 | 56 | 56 | 56 | 56 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 9 | 9 | 9 | 9 | 9 |
| காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

**குறுஞ்செய்தி**

- அடுத்த நான்கு நாட்களுக்கு லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. மேகமூட்டத்துடன் கூடிய குளிர்ந்த வானிலையே காணப்படும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்: நெல், காய்கறி பயிர்கள், வாழை மற்றும் கரும்பு**

- மக்காச்சோளம் பயிரிட்டுள்ள விவசாயிகள் தங்கள் பயிருக்கு தேவையான நுண்ணூட்டச் சத்துக்களை வழங்க, ஏக்கருக்கு 10 கிலோ ஜிங்க் சல்பேட் அல்லது 5 கிலோ சிறுதாணிய கலவையினை வைக்கலாம்.
- நெல் பயிரில் தண்டுத்துளைப்பான் பூச்சி தென்படுகிறது, அதனைக் கட்டுப்படுத்த குயினால்பாஸ் 25 EC1000 மிலி/ஹெக்டர் அல்லது பாஸ்போமிடான் 40 SL 600 மிலி/ஹெக்டர் அல்லது புரபனோபாஸ் 50 EC 1000 மிலி/ஹெக்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கலாம்.
- நிலவும் வானிலையின் காரணமாக, கரும்பு பயிரில் இடைக்கணுத் துளைப்பானின் தாக்குதல் காணப்படும், இதனை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 3 சிசி என்ற அளவில் டிரைக்கோகிரம்மா ஒட்டுண்ணி அட்டைகளை பயன்படுத்தலாம்.
- நிகமும் தட்பவெட்ப சூழ்நிலையில், பருத்தி பயிரில் வெள்ளை ஈ யின் தாக்குதல் காணப்படலாம். இதனை தடுக்க இமிடாக்லோப்ரிட் என்ற மருந்தினை ஹெக்டேருக்கு 100 மில்லி என்ற அளவில் தெளிக்கலாம்.
- தற்போதைய தட்பவெட்ப சூழ்நிலையில் நோய்த் தாக்குதலில் இருந்து கால்நடைகளை பாதுகாக்க தொழுவத்தை சுத்தமாக வைத்திருக்கவும். ஒரு லிட்டர் தண்ணீரில் 1% பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலினை பயன்படுத்தி பால் கறப்பதற்கு முன்னும் பால் கறந்த பின்பும் பசுமாட்டின் மடியை கழுவி விடவும்.